சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள் 18.09.2025

வா.சா.2 – சுவாமிநாதன் S/o. அழகன்

O.S. No.225/2021

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

குறுக்கு விசாரணை :

நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்வதற்கு அழைப்பாணை எதுவும் வந்ததா என்றால் இல்லை. வாதி மாணிக்கம் என்னை நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வரும்படி அழைத்தாரா என்றால் ஆமாம். நடந்ததை சொல்லும்படி கூறினார் அதனால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் 9ம் வகுப்பு படித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் பதிவு பெற்ற ஆவண எழுத்தரா என்றால் இல்லை. நான் வேறு ஆவணங்கள் ஏதேனும் எழுதியிருக்கிறேனா என்றால் இல்லை. முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் வழக்கறிஞரிடம் யார் தெரிவித்தது என்றால் நான் தான் தெரிவித்தேன். வாதி மாணிக்கம் தான் வழக்கறிஞரிடம் சொன்னார் என்றும் நான் கூறியதாக வழக்கிற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சியிடம் வழக்கு கடனுறுதி சீட்டில் அய்யம்மாள் கையொப்பம் இட்டுள்ள மைக்கும், நான் கையொப்பம் இட்டுள்ள மைக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு எழுதப்பட்ட அன்று நான் கையெழுத்து செய்யவில்லை. 2வது தவணை பணம் கடனாக கொடுக்கும் போது தான் என்னை அழைத்து சென்றார்கள் நான் சாட்சி கையொப்பம் இட்டேன். முதல் தவணை சென்றபோது நான் உடன் சென்றிருந்தேன் ஆனால் கடனுறுதி சீட்டில் கையெழுத்து செய்யவில்லை. வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் உள்ள வாசகங்கள் எழுதப்பட்டுள்ள கையெழுத்திற்கும் நான்

கையொப்பம் இட்டுள்ள கையெழுத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரியல்ல. நான் தான் கையெழுத்து போட்டேன். நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் கடனுறுதி சிட்டில் எழுதப்பட்டுள்ள கையெழுத்திற்கும் நான் கையெழுத்திட்டுள்ள கையெழுத்திற்கும் வேறுபாடுகள் உள்ளது என்றால் சரியல்ல. அய்யம்மாள், மாணிக்கத்திடம் எவ்வித கடனும் பெறவும் இல்லை, அதற்கு ஆதரவாக வழக்கு கடனுறுதி சீட்டை கொடுக்கவும் இல்லை நாங்கள் மாணிக்கத்திற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழககு கடனுறுதி சீட்டு வா.சா.ஆ.1 ஆனது கையொப்பம் மட்டும் அய்யம்மாள் இட்டு, வெற்று கடனுறுதி சீட்டாக நல்லுச்சாமி என்பவருக்கு கொடுக்கப்பட்டது என்றும் அதை வாதி பூர்த்தி செய்து கொண்டு தன்னிடம் கடன் பெற்றதாக பொய்கட்சியாடுகிறார் என்றால் சரியல்ல. நான் 2014ம் ஆண்டு முதல் மேலூரில் வசித்து வருகிறேன். நான் சாட்சி கையெழுத்திட்டுள்ள பகுதியில் வா.சா.ஆ.1 ஆவணத்தில் முத்துசாமிபட்டி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் அதில் எனது சொந்த ஊரை குறிப்பிட்டுள்ளேன். நான் இஸ்திரி செய்யும் தொழில் செய்வதற்கு நான் நகராட்சியில் பணம் எதுவும் செலுத்தி ரசீது பெற்றுள்ளேனா என்றால் இல்லை. நான் வாதி மாணிக்கத்திற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும் என்னுடைய சாட்சியம் ஏற்றுகொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.09.18 17:50:51 +0530

Sub Judge

Melur